# 2022 – 2023

...hospital.

...for further inquiry, they said. ENS

# Thoothukudi Formation Day observed

**EXPRESS NEWS SERVICE**
@ Thoothukudi

MARKING the 36th anniversary of formation of the Thoothukudi district, as many as 40,669 tree saplings were planted by government officials, Mother Social Service Trust volunteers and other supporting organisations across the district on Thursday. The district administration officials also planted an African Baobab tree sapling each on the premises of ten taluk offices.

Collector Dr K Senthil Raj inaugurated an event organised on behalf of the Tamil Nadu Palmyra Protection and Workers Improvement Movement and Mother Social Service Trust. District Forest Officer Abishek Tomar was also present at the event that saw the planting of a total of 36,000 palmyra seeds and palm tree saplings on Kayalpattinam beach opposite to Wavoo Wajeeha Women's College.



Collector Dr K Senthil Raj planting palm tree saplings on Thursday | EXPRESS

In a press statement, the collector said that as many as 5,201 government employees participated in the event. The green committee of the district had envisaged to plant 1 crore saplings by 2023, so as to achieve 5 crore saplings in another five years with the support of district rural development agency and non-governmental organisations.

The district administration also received over 1,069 petitions during the special grievance redressal meet conducted at the government offices on Thursday. The petitions will be addressed within two weeks, the collector said.

...among world's top 2% scientists

Indian Express (21-10-22)

22/10/2022

காயல்பட்டினம்

# வாவு வஜீஹா வனிதையர் கல்லூரியில் பட்டமளிப்பு விழா

## நெல்லை பல்கலைக்கழக துணைவேந்தர் பங்கேற்பு



காயல்பட்டினம் வாவு வஜீஹா வனிதையர் கல்லூரியில் நடந்த விழாவில் மாணவிக்கு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பிச்சுமணி பட்டம் வழங்கினார்.

ஆறுமுகநேரி, மார்ச் 6:காயல்பட்டினம் வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பட்டமளிப்பு விழா நடந்தது.

காயல்பட்டினத்தில் இயங்கும் வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 10வது பட்டமளிப்பு விழா கல்லூரி நிறுவன தலைவர் வாவு செய்யது அப்துர் ரஹ்மான் தலைமையில் நடந்தது.

இதில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்துணைவேந்தர் பிச்சுமணி, மாணவிகள் 379 பேருக்கு பட்டம் வழங்கி சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில், "தொழில்நுட்பத்தில் முன்னேறிவரும் இந்திய சமுதாயத்தில் பெண்களுக்கு சமவாய்ப்புகள்

வாழ்க்கையின் மதிப்பை உணர்ந்துகொள்ளவேண்டும். மேலும் எதிர்காலத்தில் அறிவியல் அறிஞர்களாகவும் மாற இயலும் என்ற எண்ணத்துடன் முனைப்போடு செயல்படவேண்டும்" என்றார்.

விழாவில் பல்கலைக் கழகத் தரவரிசையில் தமிழ் இலக்கியத்தில் 5 பேர், ஆங்கில இலக்கியம், கணிதவியல், பகுதி 1 தமிழ் பாடத்தில் தலா

பெற்றனர். முன்னதாக கல்லூரி முதல்வர் வாசுகி வரவேற்று ஆண்டறிக்கை வாசித்தார்.

கல்லூரிச் செயலாளர் வாவு மொகுதஸீம் வாழ்த்திப் பேசினார். பட்டம் பெற்ற மாணவிகள் விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றனர்.

கல்லூரி துணைச் செயலாளர் ஹாஜி ஹாபிஸ் வாவு அஹமது இஸ்ஹாக் ஆலிம் நன்றி

கல்விச் செய்திகள் ஜீன்



# காயல்பட்டணம் வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வாழ்க்கை திறன் கல்வி திட்டம்


காயல்பட்டணம், வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இளைஞர் செஞ்சுருள் சங்கத்தின் RRC சார்பாக வாழ்க்கை திறன் கல்வி திட்டத்தினை நடத்தினர்.

கல்லூரி முதல்வர் முனைவர் வாசுகி இந்நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். மூன்றாமாண்டு கணிதவியல் மாணவி ஜெய்னம்பு கிராத் ஓத இரண்டாமாண்டு ஆங்கில இலக்கிய மாணவி செல்வி பாத்திமா நசிரா வரவேற்புரை வழங்கினார். இளைஞர் செஞ்சுருள் சங்கத்தின் உறுப்பினர் ஆங்கிலத் துறை உதவி பேராசிரியர் ராமலெட்சுமி சிறப்பு விருந்தினரை குறித்து தொகுப்புரையை வழங்கினார்.

கல்லூரியின் முதல்வர் முனைவர் வாசுகி சிறப்பு விருந்தினருக்கு அன்பளிப்பு வழங்கிய பின் சிறப்பு விருந்தினர் தென் திருப்பேரை, அரசு மருத்துவமனை, ICTC Counsellor அமராவதி மாணவியர்களுக்கு அன்றாட வாழ்க்கையின் தேவைகளையும், சவால்களையும், அதனை திறம்பட சமாளிக்க உதவும் யுக்திகளைப் பற்றி உரையாற்றினார்கள். இதனையடுத்து மாணவியருக்கு தங்களிடம் நிலவிய கேள்விகளைக் கேட்டுத் தெரிந்து கொண்டனர். நிகழ்ச்சியின் நிறைவாக இளைஞர் செஞ்சுருள் சங்கத்தின் செயலாளர் கணிதவியல் துறையின் உதவிப் பேராசிரியர் பத்மா கார்த்தியாயினி நன்றியுரை தெரிவிக்க, இறுதியாக துஆ ஓத மற்றும் நாட்டுப்பண்ணுடன் இனிதே நிறைவடைந்தது.

R. C. Vasuki

தினத்தந்தி
(22-10-22)



காயல்பட்டினம்

# வாவு வஜிஹா பெண்கள் கல்லூரி பட்டமளிப்பு விழா

ஆறுமுகநேரி, அக்.22-

காயல்பட்டினம் வாவு வஜிஹா பெண்கள் கல்லூரியின் 13-வது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. விழாவுக்கு கல்லூரி தலைவர் வாவு எஸ். செயயது அப்துர் ரகுமான் தலைமை தாங்கினார். கல்லூரியில் செயலாளர் வாவு மொஹ்தஸிம், பொருளாளர் ஹபிபுல்லா, உதவி செயலாளர் எஸ். எ. ஆர். அகமது இஸ்ஸாக், கல்லூரி முதல்வர் வி.ரமா, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு விருந்தினராக நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக துணைவேந்தர் என். சந்திரசேகர் கலந்து கொண்டு 404 இளங்கலை பெண் பட்டதாரிகள், 31 முதுகலை பெண் பட்டாதாரிகளுக்கும் பட்டங்களை வழங்கி பேசினார். நிகழ்ச்சியில் பல்கலைக்கழக தரவரிசை பட்டியலில் இடம் பெற்ற 19 மாணவிகளுக்கும் மேலும் முதுகலை துறையில் தமிழ் துறையில் பல்கலைக தரவரிசை பட்டியலில் முதலிடம் பெற்ற தமிழ் பாட மாணவி வி. சண்முகசுந்தரிக்கு தங்கப் பதக்கத்தினையும் மற்றும் அரபி பாடத்தில் முதலிடம் பெற்ற பி. எஸ்.எம்.மொகுதூம் மீரா நாச்சிக்கும் தங்க பதக்கங்களை வழங்கினார். விழாவில், காயல்பட்டினம் நகரசபை தலைவர் கே.ஏ.எஸ் முத்து முகமது, பாளையங்கோட்டை சதக்கத்துல்லா அப்பா கல்லூரி முதல்வர் அப்துல் காதர், கல்லூரி முதல்வர் காஜா முஹைதீன், ஆட்சி மன்ற குழு உறுப்பினர்கள், வாவு வஜிஹா கல்லூரியின் டைரக்டர் மெர்சி ஹென்றி, முன்னாள் கல்லூரி முதல்வர் வாசுகி, உட்பட்ட திரளான பெற்றோர்களும், மாணவிகளும் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

தினத்தந்தி (21-10-22)

...னேற்ற சங்க கவுன்சில் தலைவர் சுசி.ரவீந்திரன், பொதுக்குழு உறுப்பினர் கோட்டுராஜா மற்றும் உப்பள தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

சுரேஷ், மற்றும் உயர் அதிகா... மரக்கன்றுகளை நட்டனர்.

இதற்கான ஏற்பாடுகளை ...



### காயல்பட்டினத்தில்

# 36 ஆயிரம் பனைவிதை நடும்பணி தொடக்கம்

ஆறுமுகநேரி, அக்.21-

தூத்துக்குடி மாவட்டம் 36-ம் ஆண்டு விழாவை முன்னிட்டு நேற்றுமதர் சமூக சேவைநிறுவனமும், மாவட்ட வன இலாக்காவும் இணைந்து காயல்பட்டினம் வாவு வஜிஹா பெண்கள் கல்லூரிக்கு எதிரே உள்ள கடற்கரை சாலையில் 36 ஆயிரம் பனை விதைகளும், 36 பனைமரக்கன்றுகளும் நடும் பணி தொடங்கியது. நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் செந்தில்ராஜ் கலந்துகொண்டு மரக்கன்று நடும் பணியை தொடங்கி வைத்தார். ...

நிகழ்ச்சியில் திருச்செந்தூர் உதவி கலெக்டர் புகாரி, தாசில்தார் சுவாமிநாதன், காயல்பட்டினம் நகர சபை தலைவர் கே. ஏ. எஸ். முத்து முகமது, நகர சபை ஆணையாளர் குமார் சிங், காயல்பட்டினம் பெண்கள் கல்லூரி தலைவர் எஸ். ஏ. செய்யது அப்துர் ரகுமான், ஆறுமுகநேரி நகர பஞ்சாயத்து தலைவர் கலாவதி கல்யாணசுந்தரம், துணைத் தலைவர் அ.கல்யாணசுந்தரம், வீரபாண்டியன் பட்டணம் பஞ்சாயத்து தலைவர் எல்லமுத்து மற்றும் காயல்பட்டினம் பெண்கள் கல்லூரி மாணவிகளும், வீரபாண்டியன் கட்டணம் செயின்ட்தாமஸ் பள்ளியின் பசுமை படையினரும், காயல்பட்டினம் எல்.கே. மேல்நிலைப்பள்ளி மாணவர்களும் கலந்து கொண்டனர்.

22/10/2022

ஞாயிறு, ஏப்ரல் 23, 2023

தினசரி

24/7/2023

# WAVOO WAJEEHA WOMEN'S COLLEGE OF ARTS AND SCIENCE

Tiruchendur Road, Kayalpatnam - 628 204.
Thoothukudi District
E-mail ID : wavoo_college@yahoo.co.in,
Phone No : 04639-280900, Mobile No : 9486785900

# WANTED
## LADY ASSISTANT PROFESSORS

Arabic
English
Commerce
Physics
Computer Science
Mathematics
Information Technology
Business Administration
Physical Education
Economics

- ✓ Qualification as per the UGC norms SET/NET/Ph.D.
- ✓ Applications with Curriculum Vitae should reach the office before 3.00 p.m. on 06.05.2023 (Saturday)
- ✓ Suitable candidates can send their applications by e-mail or post

## Admission 2023-2024 Open Now

**UG Courses**

B.A.,English
B.A.,Economics
B.Com
B.Sc.,Maths
B.Sc.,Physics
B.A.,Tamil
BBA
B.Sc.,Computer Science
B.Sc.,Information Technology

**PG Courses**

M.A.,Tamil
M.Com
M.A.,English
M.Sc.,Maths

To Apply in online www.wavoowajeehacollege.in

Wavoo S.Seyed Abdur Rahman
President

Wavoo M.M. Mohuthazeem
Secretary

# காயல்பட்டினம் மகளிர் கல்லூரியில் மாணவிகளுக்கு புத்தாக்க பயிற்சி

**ஆறுமுகநேரி, ஆக. 10–**

காயல்பட்டினம் வாவு வஜீஹா மகளிர் கல்லூரியில் முதலாமாண்டு மாணவிகளுக்கு புத்தாக்கப் பயிற்சி நடந்தது.

நிகழ்ச்சிக்கு கல்லூரி நிறுவன தலைவர் வாவு செய்யது அப்துர் ரஹ்மான் தலைமை வகித்தார். கல்லூரிச் செயலாளர் வாவு மொகுதஸீம், துணைச் செயலாளர் வாவு அஹமது இஸ்ஹாக், இயக்குநர் மெர்சி ஹென்றி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்த் துறைத் தலைவர் அருணாஜோதி வரவேற்றார். கல்லூரி முதல்வர் வாசுகி வாழ்த்துரை வழங்கினார். பாளை., சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் மகாதேவன் கலந்து கொண்டு வானம் வசப்படும் எனும் தலைப்பில் பேசினார். நூர் அஸ்மா நன்றி கூறினார்.

தினமலர்
10/8/22

R.C.Vasuki

Ram 29/9/2022

கல்ஹச் செய்திகள் (26/9/22)

# காயல்பட்டணம் வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி 75ஆவது சுதந்திரதின பவள விழா

காயல்பட்டணம், வாவு வஜீஹா வனிதையர் கல்லூரியில் சுதந்திரதின பவள விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

கல்லூரியின் அனைத்து மாணவியரும் 75ஆவது சுதந்திர பவள விழாவை கொண்டாடும் வகையில் கல்லூரியின் மைதானத்தை சுற்றி "Freedom walk" எனும் பேரணி நடைபெற்றது. சிறப்பு விருந்தினர் பாளையங்கோட்டை சாராள் தக்கர் கல்லூரியின் பணி ஒய்வு பெற்ற வேதியியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் ரமா கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இரண்டாமாண்டு வணிகவியல் துறை மாணவி செய்யது ராபியா கிராத் ஓத தமிழ்த் தாய் வாழ்த்துடன் விழா தொடங்கியது.

கல்லூரி நிறுவனர் தலைவர் அல்ஹாஜ் வாவு செய்யது அப்துர் ரஹ்மான், கல்லூரிச் செயலர் வாவு மொகுதஸீம் கல்லூரி துணைச்செயலர் ஹாஜி ஹாபிஸ் வாவு அஹமது இஸ்ஹாக் ஆலிம், கல்லூரி இயக்குநர் முனைவர். மெர்சி ஹென்றி மற்றும் வாவு SAR கல்வி அறக்கட்டளை உறுப்பினர்களும் முன்னிலை வகித்தனர். வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் சுபா வரவேற்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் வாசுகி வாழ்த்துரை வழங்கினார்.

மாணவியர் 5 வண்ண அணியினராகப் பிரிந்து அணிவகுத்து (March Past) சென்று சிறப்பு விருந்தினருக்கு மரியாதை செய்தனர். சிறப்பு விருந்தினர் முனைவர் ரமா நம் தேசத்தின் மூவர்ணகொடியை ஏற்றி வைத்தார். தொடர்ந்து கொடிப்பாடல் இசைக்கப்பட்டது. மாணவியர் அனைவரும் தாய்த் நாட்டின் ஒற்றுமையைப் போற்றும் உறுதி மொழியை எடுத்துக் கொண்டனர்.

சிறப்பு விருந்தினர் முனைவர் ரமா சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்களைப் பற்றியும், தேசத்தைக் காப்பதும் முன்னேற்றுவதும் மாணவியர் கடமை என்று கூறி சிறப்புரை ஆற்றினார்.

சுதந்திரத்தை போற்றும் வண்ணம் பேச்சு, பாடல், நடனம், ஊமை நாடகம், நிலைக் காட்சி நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளில் மாணவியர் கலந்து கொண்டு தங்களது தேசப்பற்றை வெளிப்படுத்தினர்.

இயற்பியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் உஷாராணி நன்றியுரை வழங்கினார். மூன்றாமாண்டு கணினி அறிவியல் துறை மாணவி செய்யது சுஹைனா துஆ ஓத நாட்டுப்பண்ணுடன் விழா நிறைவு பெற்றது.

இவ்விழாவில் கல்லூரி பேராசிரியர்கள், மாணவிகள் ஆகியோர் உற்சாகமாக கலந்து கொண்டனர்.



காயல்பட்டணம், வாவு வஜீஹா வனிதையர் கல்லூரியில் சுதந்திர பவள விழாவை கொண்டாடும் வகையில் கல்லூரியின் மைதானத்தை சுற்றி ப்ரீடம் வாக் எனும் பேரணி நடைபெற்றது.